முருகப்பெருமான் துணை

தவத்திரு ஆறுமுக அரங்கமகா ஞானியர்க்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1380

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

10.07.2023, திங்கட்கிழமை

1. தர்மராஜனே அரங்கா வாழ்க
   தனிப்பெருங்கருணை கொண்டு உலகில்
   பெருமைமிக்க ஞான யுகம் படைக்க
   பிரணவக்குடில் படைத்த அரங்கனே வாழ்க
2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியர் யானும்
   வழங்குவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
   (சோபகிருது வருடம் ஆனி மாதம் 25ம் நாள், 10.07.2023, திங்கட்கிழமை)
   ஊழ்போக்கும் மகா சக்தி நீயப்பா
   உண்மைபொருள் உணர்த்தும் ஞானியும் நீயப்பா
3. அப்பனே அரங்கனே என உன்பால் சரணாகதி
   அனைவரும் கொண்டு ஞானம் பயின்று வர
   காப்பான ஞான வாழ்வாக
   கலியுகத்தில் இடர்பற்றாத பாதுகாப்புமிக்க வாழ்வுமாக
4. ஆகவே உலகோர் கண்டு தேறி
   அரங்கன் உன்னால் படிப்படியாய் ஞானவான்களாக
   வரங்கள் பல பெற்று இனிதே வருமுலகில்
   வையகத்தை காக்கும் ஞானிகளாகவும் வடிவம்
5. வடிவம் தனை சடுதி அடைய நேரும்
   வல்லமைகொண்ட அரங்கனால் மட்டுமே இந்த அற்புதம் நடக்கும்
   இல்லாமை என்கின்ற நிலையை எல்லாம்
   இந்த உலகத்தை விட்டு விரட்டி
6. எல்லோர்க்கும் சமமான
   எல்லா வரமும் தருகின்ற
   வல்லமை மிக்க அரங்கனே
   வையகத்தை வழிநடத்தும் மகா சக்தி நீ

7. உன் சக்தி உலகமெல்லாம் அறியப்பட
உன் சக்தி உலகோர்க்கு வரமாக தரப்பட
எல்லா திக்கிலும் அரங்கன் தயவாலும் ஆசியாலும்
எல்லாவித மாற்றங்களும் நன்னெறியாகக் கண்டு இனிதே
8. இந்த உலகம் ஞானலோகமாக
இவ்வுலகை ஆள்பவர்கள் ஞானிகளாக
கனிவேலவன் தலைமைகொண்ட ஞான ஆட்சிக்காலமாக
கலியுகம் சடுதி மாற்றம் பெறும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–